# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 24, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஐரோப்பிய நாடுகளில் தற்போது நிலவி வரும் அதிதீவிர வெப்பஅலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

(i) குறிப்பாக, பிரான்ஸில் செவ்வாய்க்கிழமை வரலாறு காணாத அளவு அதிகபட்ச வெப்பம் பதிவானது. அந்நாட்டின் தேசிய சராசரி வெப்பம் 29.8 டிகிரி செல்சியஸை எட்டியது. பல இடங்களில் பகல்நேர வெப்பம் 40 டிகிரி செல்சியஸை (104 டிகிரி ஃபாரன்ஹீட்) தாண்டியுள்ள நிலையில், அங்கு வெப்பத்தின் தாக்கத்தால் கடந்த வார இறுதியிலிருந்து 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

(ii) பிரான்ஸ் மட்டுமின்றி பிரிட்டன், ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகளிலும் வெப்பம் உச்சத்தை எட்டியுள்ளது. வட ஆப்பிரிக்கா, சஹாரா பாலைவனப் பகுதிகளில் இருந்து வரும் வெப்பக் காற்றால், ஐரோப்பாவில் இந்த 'ஒமேகா பிளாக்' எனப்படும் காற்று நகர்வற்ற தீவிர வெப்ப நிலை உருவாகியுள்ளதாக வானிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(iii) பருவநிலை மாற்றம் காரணமாக, உலகளாவிய சராசரியைவிட ஐரோப்பா இருமடங்கு வேகமாக வெப்பமடைந்து வருவதாக உலக வானிலை அமைப்பு எச்சரித்துள்ளது.

2. தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், வலதுசாரி வேட்பாளர் அபேலார்டோ டீலா எஸ்ப்ரியல்லா மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

(i) டீ லா எஸ்ப்ரியல்லா 49.66 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ள நிலையில், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட இடது சாரி வேட்பாளரான செனட்டர் இவான் செபேடா 48.70 சதவீத வாக்குகளைப் பெற்று, சுமார் 2.50 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் பின்னடைவைச் சந்தித்துள்ளார்.

(ii) தென் அமெரிக்க நாடுகளில் சமீபகாலமாக போதைப்பொருள் கடத்தல், வன்முறைகள் அதிகரித்துள்ள சூழலில், நாட்டின் பாதுகாப்பு குறித்த கொலம்பிய மக்களின் கவலையே டீ லா எஸ்ப்ரியல்லாவின் வெற்றிக்கு முக்கியக் காரணமாக அமைந்துள்ளது.

(iii) நாட்டின் நெருக்கடிகளுக்கு தற்போதைய அதிபர் பெட்ரோவைக் குற்றஞ்சாட்டிய டீ லா எஸ்ப்ரியல்லா, ஆயுதக் குழுக்களுடனான பேச்சுகளை முடிவுக்குக் கொண்டுவரப் போவதாக அறிவித்தார். அத்துடன், வரிக் குறைப்பு, அரசுத் துறை சீர்திருத்தம், எண்ணெய் எரிவாயு உற்பத்தி அதிகரிப்பு உள்ளிட்ட திட்டங்களையும் அவர் முன்னிறுத்தினார்.

(iv) அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் நேரடி ஆதரவைப் பெற்றிருந்த டீ லா எஸ்ப்ரியல்லா, தேர்தல் வெற்றிக்குப் பிறகு அவரிடம் இருந்து வாழ்த்து பெற்றார்.

(v) எவ்வித முன் அரசியல் அனுபவமும் இல்லாத டீ லா எஸ்ப்ரியல்லா, நாடாளுமன்றத்தில் எந்த கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை இல்லாததாலும், எதிர்க்கட்சி அதிக இடங்களைக் கொண்டுள்ளதாலும், தனது வலதுசாரித் திட்டங்களைச் செயல் படுத்துவதில் சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. துருக்கியில் அடுத்த மாதம் நடைபெறும் 'நேட்டோ' கூட்டமைப்பின் உச்சி மாநாட்டையொட்டி, பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சோதனையில் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய 56 பேர் உள்பட 209 பேர் கைது செய்யப்பட்டனர்.

(i) வரும் ஜூலை 7,8 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உள்ளிட்ட 32 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளதால், அங்குபாதுகாப்பு ஏற்பாடுகள் முன் னெப்போதும் இல்லாத வகையில் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

4. தமிழகத்தில் பசுமை எரிசக்தித் திட்டங்களை மேம்படுத்துவதற்காக இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் இணைந்து புதிய கூட்டு நிறுவனம் ஒன்றை அமைக்கவுள்ளதாக என்எல்சி இந்தியா அறிவித்தது.

(i) சுரங்கம் மற்றும் மின் உற்பத்தித் துறையில் முன்னிலையில் உள்ள என்எல்சி நிறுவனம், தற்போது புதுப்பிக்கத்தக்க மற்றும் பசுமை எரிசக்தித் துறைகளிலும் தனது செயல்பாடுகளைத் தீவிரப்படுத்தி வருகிறது. அந்தவகையில், தமிழகத்தில் சூரிய ஒளி, காற்றாலை, 'ஹைப்ரீட்' மின்சாரம், பேட்டரி மற்றும் நீரேற்று மின் சேமிப்புத் திட்டங்கள் உள்ளிட்ட பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை மேம்படுத்துவதற்காக இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.

(ii) மேலும், தமிழகத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் உள்ள பிற தொழில் வாய்ப்புகளையும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

(iii) இந்தியன் ஆயில் நிறுவனத்துடனான இக்கூட்டணி, தூய்மை மற்றும் நீடித்த எரிசக்தித் துறையில் 'நவரத்னா' அந்தஸ்து பெற்ற எங்கள் நிறுவனத்தின் விரிவாக்கத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாகும் என்று என்எல்சி நிறுவனத் தலைவர் பிரசன்ன குமார் மோட்டுப்பள்ளி தெரிவித்தார்.

5. இந்திய டென்னிஸ் நட்சத்திரம் விஜய் அமிர்தராஜுக்கு பத்ம பூஷண் விருதையும், இந்திய கிரிக்கெட் நட்சத்திரம் ரோஹித் சர்மாவுக்கு பத்ம ஸ்ரீ விருதையும் வழங்கி, குடியரசுத்த லைவர் திரௌபதி முர்மு கௌரவித்தார்.

(i) பத்ம விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி, தில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்றது. இதில் விளையாட்டுத் துறையைச் சேர்ந்த 8 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

(ii) மொத்தம் 9 பேருக்கு விருது அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இந்திய மகளிர் கிரிக்கெட் அணி கேப்டன் ஹர்மன்பிரீத் கௌர் தனக்கான பத்ம ஸ்ரீ விருதை கடந்த மே மாதம் குடியரசுத் தலைவரிடம் பெற்றுக் கொண்டார். இந்நிலையில், இதர நபர்களுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு விருது வழங்கி கௌரவித்தார்.

(iii) பட்டியலின்படி, டென்னிஸ் ஜாம்பவான் விஜய் அமிர்தராஜ் பத்ம பூஷண் விருது வழங்கி கௌரவிக்கப்பட, முன்னாள் ஹாக்கி வீரர் பல்தேவ் சிங், பந்தெலி தற்காப்புக் கலை பயிற்சியாளர் பகவன்தாஸ் ராய்க்வர், சிலம்ப பயிற்சியாளர் பழனிவேல், பாரா தடகள வீரர் பிரவீண் குமார், கிரிக்கெட் வீரர் ரோஹித் சர்மா, ஹாக்கி வீராங்கனை சவிதா புனியா ஆகியோர் பத்ம ஸ்ரீ விருது பெற்றனர்.

6. திருப்போரூரில் 120 ஏக்கரில் சர்வதேச தரத்தில் ஒலிம்பிக் மைதானம் அமைக்கப்படும் என விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா திறந்து வைத்தார்.

(i) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் தின விழாவில் 5 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.13 லட்சம் ஊக்கத் தொகை, ரூ.28 கோடியில் புதிய மைதானங்களை திறந்து வைத்து விளையாட்டு அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசியது:

- படிப்புக்கு உடல்நலம் முக்கியம். 2 ஆண்டுகளில் விளையாட்டுத் துறையில் தமிழகம் அதிக வளர்ச்சிப் பெற வேண்டும் என்பது எனது நோக்கம். சிறந்த வீரர்களை உருவாக்க திருப்போரூரில் 120 ஏக்கரில் சர்வதேச தரத்தில் ஒலிம்பிக் மைதானத்தை உருவாக்க இருக்கிறோம். மலைவாழ் மக்களுக்காக கள்ளக்குறிச்சி கல்வராயன்மலையின் மேல் ஒரு ஒலிம்பிக் பயிற்சி மையத்தை அமைக்க போகிறோம் எனத் தெரிவித்தார்.

(ii) விழாவில் ஒலிம்பிக் விளையாட்டு வீரர்கள் பாஸ்கரன், தேவராஜன் ரஷ்மிசக்கரவர்த்தி, தருண் அய்யாசாமி, கஸ்தூரி ராஜாமணி ஆகியோர் தங்களின் விளையாட்டு அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டனர்.

7. இந்தியாவும் சீனாவும் பரஸ்பர முக்கிய நலன்களை மதிப்பது அவசியம்; இரு நாடுகளின் தலைவர்களால் எட்டப்பட்ட முக்கிய கருத்தொற்றுமையை நடைமுறைப்படுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யி தெரிவித்தார்.

(i) பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டம், புது தில்லியில் தொடங்கியது. இதையொட்டி, தில்லிக்கு வந்த சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யி, தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவலை சந்தித்துப் பேசினார். அப்போது, இருதரப்பு உறவுகளை இயல்பாக்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இருவரும் விவாதித்தனர். இந்திய-சீன எல்லை விவகாரங்களுக்கான சிறப்புப் பிரதிநிதிகள் என்ற முறையில் அது தொடர்பாகவும் ஆலோசித்தனர்.

8. தானியங்கி பணப் பரிமாற்ற இயந்திரங்கள் (ATM) மீதான பொதுமக்களின் அதிருப்தி மற்றும் அவற்றை பராமரிப்பதில் வங்கிகள் எதிர்கொள்ளும் பொருளாதார சவால்கள்.

(i) அன்றாட வாழ்வில் ATM-களின் ஒருங்கிணைப்பு

- "எப்போது வேண்டுமானாலும் பணம் பெறலாம்" (Anytime Money) என்றழைக்கப்படும் ATM இயந்திரங்கள், பொதுமக்களின் அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்டன.
- இருப்பினும், பல இயந்திரங்கள் அடிக்கடி பழுதடைவதாலோ அல்லது அவற்றில் பணம் இல்லாததாலோ, அவை மக்களின் எரிச்சலுக்கும் கோபத்திற்கும் காரணமாக அமைகின்றன.

(ii) உலகளாவிய மற்றும் தேசிய அளவிலான ATM போக்குகள்

- உலகின் முதல் ATM இயந்திரம் 1967-ல் லண்டனில் நிறுவப்பட்டது; இந்தத் தொழில்நுட்பம் இந்தியாவை வந்தடைய 20 ஆண்டுகள் ஆகின, 1987-ல் மும்பையில் முதல் மையம் திறக்கப்பட்டது.
- இந்தியாவில் தற்போது 2.51 லட்சம் ATM மையங்கள் உள்ளன; இது 10,000 மக்களுக்கு 24

இயந்திரங்கள் என்ற விகிதத்தைக் குறிக்கிறது.

- உலகளவில் 10,000 மக்களுக்கு 44 ATM-கள் என்ற சராசரியுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவாகும், எனவே மேலும் விரிவாக்கம் தேவை என்பதை இது உணர்த்துகிறது.

(iii) பணத் தட்டுப்பாடு குறித்த முரண்பாடு

- புழக்கத்தில் உள்ள பணத்தின் அளவு சாதனை அளவாக ₹42.56 லட்சம் கோடியை எட்டியுள்ளதாகவும், இது ஆண்டுக்கு 12% என்ற விகிதத்தில் வளர்ந்து வருவதாகவும் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தெரிவிக்கிறது.
- பொருளாதாரத்தில் இவ்வளவு பணம் இருந்தபோதிலும், ATM மையங்களில் அடிக்கடி "பணம் இல்லை" (No Cash) அல்லது "சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது" (Service Interrupted) போன்ற அறிவிப்புகள் காணப்படுகின்றன.
- பிரச்சனை பணத்தின் பற்றாக்குறை அல்ல; மாறாக, இயந்திரங்களுக்குப் பணத்தைக் கொண்டு செல்வதிலும் அவற்றை பராமரிப்பதிலும் உள்ள அதிக செலவு மற்றும் செயல்பாட்டுச் சிக்கல்களே இதற்குக் காரணமாகும்.

(iv) பராமரிப்பு மற்றும் செயல்பாட்டுச் செலவுகள்

- ஒரு ATM மையத்தை இயக்குவதில் 24 மணிநேரப் பாதுகாப்புப் பணியாளர்கள், தொடர்ச்சியான ஏசி (AC) வசதி மற்றும் பணத்தை நிரப்புவதற்கான மனித உழைப்பு உள்ளிட்ட பெரும் செலவுகள் அடங்கியுள்ளன.
- இந்தச் செயல்பாட்டுச் செலவுகள் ஆண்டுதோறும் தொடர்ந்து அதிகரித்து வருவதால், வங்கிகளுக்கு நிதிச் சுமை ஏற்படுகிறது.

(v) சேவை கட்டணங்களின் பரிணாம வளர்ச்சி

- சேவை கட்டணங்கள், 2008-க்கு முன்பு வங்கிகளால் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களிலிருந்து மாறி, தற்போது ரிசர்வ் வங்கியால் (RBI) ஒழுங்குபடுத்தப்படும் கட்டணங்களாக மாறியுள்ளன.
- நிதி சார்ந்த பரிவர்த்தனைகளுக்கான கட்டணம் ₹17 ஆகவும், நிதி சாராத விசாரணைகளுக்கான கட்டணம் ₹6 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது; அதேவேளையில், இலவச வரம்பை மீறும் பரிவர்த்தனைகளுக்கான கட்டணம் ₹23 ஆக உயர்ந்துள்ளது.
- நஷ்டமின்றி ATM சேவைகளை இயக்க, வங்கிகள் ஒரு பரிவர்த்தனைக்குக் குறைந்தபட்சம் ₹30 வரை வசூலிக்க வேண்டியிருக்கலாம்.

(vi) ரொக்கத்தை நிரப்பும் போக்கு குறைதல்

- லாபமின்மை காரணமாக, வங்கிகள் ஏடிஎம்களில் (ATM) பணத்தை நிரப்புவதில் குறைவான ஆர்வத்தையே காட்டுகின்றன.
- பண விநியோகத்தில் ஏற்பட்டுள்ள கடும் சரிவை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன: நவம்பர் 2025-இல் தேவைப்பட்ட தொகையில் 80% பூர்த்தி செய்யப்பட்ட நிலையில், மே 2026-க்குள் அந்த அளவு 57%-ஆகக் குறைந்தது.
- நாடு தழுவிய அளவில் மாதந்தோறும் ₹8,94,000 கோடி தேவைப்படும் நிலையில், தற்போது ஏடிஎம் மையங்களுக்கு சுமார் ₹54,000 கோடி மட்டுமே வழங்கப்படுகிறது.

(vii) ஏடிஎம்களின் தொடரும் அவசியம்

- யுபிஐ (UPI) மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் வளர்ச்சியால் ஏடிஎம்கள் காலாவதியாகிவிட்டதாக வங்கிகள் கருதுவது தவறாகும்.
- மின்தூக்கிகள் (elevators) மற்றும் நகரும் படிக்கட்டுகள் (escalators) பயன்பாட்டில் இருப்பதால் சாதாரண படிக்கட்டுகள் தேவையற்றதாகிவிடுவதில்லை.
- இதற்கான தீர்வு என்னவென்றால், அருகருகே உள்ள தேவையற்ற ஏடிஎம்களின் எண்ணிக்கையைத் திட்டமிட்டுக் குறைப்பதாகும்; அதே வேளையில், மீதமுள்ள இயந்திரங்கள் நம்பகமானதாகவும் செயல்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் - இதற்குச் சேவை கட்டணங்களில் சற்று உயர்வு தேவைப்பட்டாலும் கூட.

9. பெண்களின் அதிகாரமளித்தலில், குறிப்பாக அரசியல் களத்தில் உள்ள கட்டமைப்பு ரீதியான தடைகள் குறித்த பகுப்பாய்வு.

(i) கல்வி, அறிவியல் அல்லது ராணுவம் போன்ற துறைகளில் பெண்கள் பெறும் தனிப்பட்ட வெற்றிகள், முழுமையான கட்டமைப்பு மாற்றத்தைப் பிரதிபலிப்பதில்லை.

- பெண்களுக்கு எதிரான தடைகள் கண்ணாடியால் ஆன ஒற்றைப் படலத்தைப் போன்றவை அல்ல; அவை பழமையான சமூக மரபுகள், மனப்பான்மைகள், பொருளாதாரச் சார்புநிலை, பாதுகாப்பு குறித்த கவலைகள் மற்றும் மூடிய அதிகாரக் கட்டமைப்புகள் ஆகியவற்றால் ஆன பல அடுக்கு அமைப்பைக் கொண்டவை.
- கிராமப்புறங்களைச் சேர்ந்த சாதாரணப் பெண்கள் பொது வாழ்க்கையில் நுழைந்து, தன்னம்பிக்கையுடன் தலைமைப் பொறுப்புகளை ஏற்கும் சூழல் உருவாகும்போது மட்டுமே உண்மையான முன்னேற்றம் சாத்தியமாகும்.

(ii) அரசியலில் பிரதிநிதித்துவ இடைவெளி

- உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இருந்தபோதிலும், இந்தியச் சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் குறிப்பிடத்தக்க இடைவெளி உள்ளது.
- ஜனநாயகச் செயல்பாட்டில் வாக்காளர்களாகப் பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்றாலும்—பெரும்பாலும் ஆண்களை விட அதிக எண்ணிக்கையில் வாக்களித்தாலும்—அரசியல் அதிகாரம் மற்றும் முடிவெடுக்கும் பொறுப்புகளில் அவர்களுக்கு நியாயமான பங்கு பெரும்பாலும் மறுக்கப்படுகிறது.

(iii) கட்டமைப்பு மற்றும் கலாச்சாரத் தடைகள்

- அரசியல் பின்னணியோ அல்லது குறிப்பிடத்தக்க நிதி வசதியோ இல்லாத பெண்கள் அரசியல் உலகிற்குள் நுழைவது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக உள்ளது.
- அரசியல் கட்சிகளுக்குள் ஆழமாக வேரூன்றியிருக்கும் ஆணாதிக்கக் கலாச்சாரம் மற்றும் தேர்தலுக்கான அதிக செலவு ஆகியவை கண்ணுக்குத் தெரியாத தடைகளாகச் செயல்படுகின்றன.
- முடிவெடுக்கும் செயல்முறைகள் பெரும்பாலும் முறைசாரா, ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் சூழல்களில் (எ.கா., நள்ளிரவு கூட்டங்கள் அல்லது தனிப்பட்ட குழுக்கள்) நடைபெறுகின்றன; சமூகக் கட்டுப்பாடுகள் அல்லது குடும்பப் பொறுப்புகள் காரணமாகப் பெண்கள் அவற்றில் எளிதாகப் பங்கேற்க முடிவதில்லை.

(iv) கட்டமைப்புச் சீர்திருத்தத்தின் அவசியம்

- பெண்களின் அரசியல் பங்கேற்பு என்பது நீண்ட கால விவாதத்திற்கான ஒரு தலைப்பாக மட்டும் பார்க்கப்படாமல், உடனடி மற்றும் அடிப்படை உரிமையாகக் கருதப்பட வேண்டும்.
- அரசியல் கட்சிகள் பெண்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீத இடங்களை ஒதுக்கச் சட்டப்பூர்வமாக நிர்பந்திக்கப்பட வேண்டும்; மேலும், அடிமட்ட நிலையிலிருந்தே பெண் தலைவர்களை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.
- பெண்களுக்குச் சமமான குரல் கிடைப்பதை உறுதிசெய்ய, முடிவெடுக்கும் செயல்முறைகளை வெளிப்படையானதாகவும் அனைவரையும் உள்ளடக்கியதாகவும் மாற்றுவது அவசரத் தேவையாகும்.

(v) பொருளாதாரச் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பின் பங்கு

- பொருளாதார அதிகாரமளித்தல் என்பது அரசியல் அதிகாரத்திலிருந்து பிரிக்க முடியாதது; நிதி வலிமை இல்லாவிட்டால், பொது வாழ்க்கையில் பெண்கள் தங்கள் சுதந்திரத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் சிரமப்படுகிறார்கள்.
- குறைந்த வட்டி விகிதத்திலான கடன்கள், புதிய தொழில் முயற்சிகளுக்கான (start-ups) ஆதரவு மற்றும் சொத்துரிமை போன்ற அரசு கொள்கைகள், ஒரு பெண்ணின் சுயசார்பை வலுப்படுத்துவதற்கு அவசியமானவை.
- பாதுகாப்பான பொதுப் போக்குவரத்து, தெருவிளக்குகள் மற்றும் கண்காணிப்பு வசதிகள் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள், பெண்கள் பொதுக் கூட்டங்களில் பங்கேற்பதற்கும், தலைமைப் பொறுப்புகளை ஏற்பதற்காகப் பாதுகாப்பாகப் பயணம் செய்வதற்கும் அவசியமான முன்நிபந்தனைகளாகும்.

(vi) முடிவுரை: ஜனநாயகக் கடமையாக அதிகாரமளித்தல்

- அதிகாரமளித்தலை ஒரு அரசியல் கருணைச் செயலாகவோ அல்லது வெறும் நலத்திட்ட நடவடிக்கையாகவோ பார்க்கக்கூடாது; இது முழுமையான மற்றும் துடிப்பான ஜனநாயகத்திற்கு இன்றியமையாத ஒரு தேவையாகும்.
- சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்களின் முழுமையான மற்றும் சமமான பங்கேற்பின் மூலமே இந்தியாவின் எதிர்கால வளர்ச்சி சாத்தியமாகும்.